DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="2">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 29/2026</td></tr>
<tr><td colspan="2">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 1</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு. பிரபாகரன்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">ஹோட்டலில் சப்ளையராக வேலை</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>சுபரமணியன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>தாராசுரம்</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">42</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19th day of June 2026. 19-06-2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 06.48**

**முதல் விசாரணை**

நான் தாராசுரம் கீழத் தெருவில் வசித்து வருகிறேன் . ஹோட்டலில் சப்ளையராக வேலை செய்து வருகிறேன் . சுமார் 2 இரு வடத்திற்கு முன்பு காவல் நிலையம் சென்றிருந்தேன் . கையெழுத்து கேட்டார்கள் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரிலுள்ள எனது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1.** ஆஜர் எதிரியை தெரியாது . இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

இத்தருணத்தில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசார**ணை

21/03/2025 இரவு 9.30 மணியளவில் நான் தாராசுரம் புளியம்தோப்பில் இருந்த மது பான கடைக்கு சென்ற போது, அங்கு நின்ற பெயர் விலாசம் பின்னர் கேட்டு தெரிந்த பிரபு என்கின்ற பெரிய அண்ணா த/பெ மணி , தாராசுரம் என்பவர் என் அருகே வந்து பையில் வைத்திருக்கும்பணத்தை எடுடா என்று என்னிடம் பேசினார் என்றும் , அதற்கு என்னிடம் 300 ரூபாய் தான் பணம் உள்ளது அதில் தான் மதுபான பாட்டில் வாங்க போகிறேன் என்று சொன்ன போது, மேற்படி பெரியண்ணா பிரபு என்னை குச்சிகாரி தேவடியா மகனே என்று என்னை யார் என்று தெரியுமா கும்பகோணத்திலேயே பெரிய ரவுடிடா என் மீது 2 கொலை வழக்குகள் உள்ளது என்று சொல்லிக்கொண்டே இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை காட்டி பணத்தை கொடுடாஇ

கொடுக்கவில்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்றும், உடனடியாக பையில் வைத்திருந்த ரூபாய் 300 யை எடுத்து கொடுத்துவிட்டேன் என்றும் , பணத்தை வாங்கிக்கொண்டு வெளியில் எங்கேயாவது சொன்னால் உன்னை கொன்று விடுவேன் என்று அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் என்னை மிரட்டினார் என்றும், அதை பார்த்த அங்கு வந்தவர்கள் தடுக்க முயன்ற போது அவர்களையும் ஆஜர் எதிரி கையில் அரிவாளைவைத்துக்கொண்டு அங்கிருந்தவர்களை நோக்கி சுழற்றி யாராவது கிட்டே வந்தால் கொன்றுவிடுவேன் என்று அங்கும் இங்கும் ஓடினார் என்றும் , அங்கிருந்தவர்கள் உயிருக்கு பயந்துக்கொண்டு அருகில் செல்லவில்லை, அங்கிருந்த ஆஜர் எதிரி கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பி ஓடிவிட்டார் என்றும் நான் பயந்துக்கொண்டு என் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும் , பின்பு 22/03/2025 ஆம் தேதியன்று காவல் நிலையம் வந்து மேற்படி நபரின் மீது புகார் கொடுத்தேன் என்றும் போலிஸ் விசாரணையில் மேற்படி சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்துக்கொண்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை.

**முடிக்கப்பட்ட நேரம்: 6.58**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.